Date: 26.02.2024

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்

OS.126/2023

வா.சா.1

**பெயர்-** திரு. ஜாபர்சேட்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்திற்கும், எனக்கும் எந்தவிதமான உரிமை பாத்தியமும் இல்லை என்று சொன்னால் எனது நண்பர் உடன்படிக்கை போட்டுள்ளார். அவரும் நானும் பங்குதாரர்கள் ஆவார்கள். ரியாஸ் என்ற நபருக்கு பதிவு செய்யாத விற்கிரைய ஆவணம் மூலம் 12 வருடங்கள் கழித்து தற்போது உரிமை உள்ளதா என்றால் உரிமை இருப்பதால் தான் கிரையம் வாங்கி கொடுத்தோம். சொத்தின் உரிமையாளரிடமிருந்து நேரடியாக சட்ட முறைப்படி பதிவு துறை மூலம் பதிவு ஆவணம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. என் மூலம் தான் சொத்தை கிரையம் வாங்கினார்கள். சொத்தை கிரையம் வாங்கிய அன்று பிரதிவாதி எனக்கு எந்த கடன் பத்திரத்தையும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் அந்த கடன் பத்திரத்தை நானாக எழுதி கையொப்பமிட்டுக்கொண்டேன் என்றால் சரியல்ல. சொத்தின் உரிமையாளரிடமிருந்து கிரையம் வாங்கிய முழு பணத்தையும் கொடுத்துவிட்டார் என்றும், எனவே எனக்கு தொகை எதையும் தரவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தான் ரூ.11,00,000/- தொகையை ஏற்பாடு செய்து கொடுத்தோம். சொத்தை வாங்குபவர்களும், விற்பவர்களும் நேரடியாக தொடர்பு கொள்ளும்போது எங்களிடமிருந்து பணம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சொத்தை விற்பவருக்கும், எங்களுக்கும் தான் நெருங்கிய தொடர்பு உள்ளது. பிரதிவாதி தன்வசம் பாதி பணம் தான் உள்ளது என்றும், மீதி பணத்தை தரவேண்டும் என்றும் என்னிடம் கேட்டார். சொத்தை வாங்கிக்கொடுக்கும்போது தரகு பணத்தில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக நான் இந்த வழக்கை போலியாக சித்தரித்து ஆவணத்தை தயார்

செய்து கையொப்பமிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்திலுள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது தான் என்பதை நிரூபிக்க அந்த ஆவணத்தை நிபுணர் கருத்துரைக்கு அனுப்ப நான் ஒப்புக்கொள்கிறேனா என்றால் ஒப்புக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை கேட்டுக்கொண்டதற்கிணங்க பகுதியாக நிறுத்திவைக்கப்படுகிறது.**